**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 27. கான்ஹோ பாத்ரா தேவி [அபங்கம் பாடிய அடியார்களுள் ஒருவர்]**

---

இந்த அம்மையின் சரிதம் எழுதும் போது நம்மை அறியாமல் ஏதோ ஒரு உந்துதல் சக்தி மனதில் எழுகிறது.ஆன்மீக பலம் ஒன்றே மனிதன் தன் அறியாமையால் ஏற்படும் ப்ரச்சனைகளுக்கு எல்லாம் தீர்வு காணும் மருந்து என்பதை இவரது வாழ்க்கை உணர்த்தும்.இக்காலத்தில் பல பெண்களுக்கும் இவரது சரிதம் ஒரு மிக நல்ல வழியைக் காட்டும்.

இறைவனை அடைவதற்குக் குலமும் தொழிலும் தடையே இல்லை.தூய அன்பு கொண்ட மனம் ஒன்றே நல்வழி ஆகும் என்பதை இவரது சரிதமும் மீண்டும் வலியுறுத்துகிறது.

***குழந்தையின் உயர்விற்குப் பெற்ற அன்னையே மிகவும் முக்கிய உந்து சக்தி.அதனால் தான் தாயே முதல் குரு என்கின்றன நம் சாஸ்த்ரங்கள்.***

**வேசி மகள் மாறுவாளா?**
மஹாராஷ்ட்ராவில் மங்கள்பட் நகரின் ப்ரபலமான தாசி ச்யாமா.அழகிலும் ஆடல் பாடலிலும் மிகவும் சிறந்தவர். அதே வேளையில் தெய்வ பக்தியிலும் தன்னை ஈடுபடுத்துக் கொண்டவர்.செய்யும் தொழில் உடலை விற்பதாக இருப்பினும் மனதில் பண்டரீநாதனின் பாத கமலங்களை சதா த்யானிப்பது இவரது வினையானது.எப்படியும் தன் ஒரே மகளின் வாழ்க்கை வேறு விதத்தில் உயர்ந்து விட இவர் தீவிர சங்கல்பம் கொண்டார்.அந்த அருமை மாமகள் தான் கான்ஹோ பாத்ரா தேவி.

சிலப்பதிகார மாதவி-மணிமேகலை வாழ்க்கையின் போக்கில் தான் இவரது வாழ்க்கையும் அமைகிறது. மகள் எப்போது வயதுக்கு வருவாள், அவளை பெண்ணாளலாம் என்று அரசன் ஏங்குகிறான்.அதே கதியில் இவரோ எப்போது எவ்வகையில் தன் மகளுக்கு இத்தொழிலில் இருந்து விடுதலை கிடைத்து சராசரிப் பெண்ணைப் போல் வாழ்க்கை கிடைக்கும் என்று பண்டரீ ஈசனை வணங்கினாள் ச்யாமா.

**சீதையும் ராதையும் கோதையும் தந்த தன்னம்பிக்கை**
தன் மகளுக்கு தினமும் ஸ்ரீமத் பாகவத்தை போதித்து வந்தாள் ச்யாமா. ஸ்ரீராதா ராணியின் ப்ரேம பக்தியும் காதலும் காமமும் சர்வேஸ்வரனுக்கே உரித்தாக

இருந்ததை சதா நினைவு படுத்திக் கொண்டு வருகிறார்.மிகச் சிறிய வயதில் அதுவும் கர்ப்பத்தில் இருந்து தன் தாய் ஊட்டிய பக்தி விழிப்புணர்வில் கான்ஹோபாத்ரா தேவி பண்டரீ நாதனின் காதலை எண்ணி எண்ணி பக்தி செலுத்துவாள் ஆயினள்.இக்கட்டத்தில் ஸ்ரீஆண்டாளின் திவ்ய சதிதத்தைக் கேட்கும் சந்தர்பமும் வர, தன்னையும் ஒரு நாள் ஈஸ்வரன் ஏற்றுக் கொள்வான் என்று நம்பினாள்.

உண்மையான பக்தியால் சீதை பூமிக்குள் சென்றதை சதா எண்ணி எண்ணி பரவசம் கொள்வாள் பாத்ரா தேவி.இக்கட்டத்தில் கார்த்திகை ஏகாதசிக்குப் பண்டரீபுரம் சென்ற கூட்டத்துடன் அவளும் சென்றாள். பண்டரீபுர தேவன் மீது மிக அழகிய அபங்கங்கள் அருளிச்செய்து பாடும் ஆற்றல் பெற்றாள் பாத்ரா தேவி.மகளின் அபங்கங்களுக்கு அன்னையே அபிநயம் பிடிப்பாளாம்.

ச்யாமாவின் மகள் பண்டரீபுரத்தில் பஜனை செய்து ஆடுவதை அறிந்து பல கூட்டம் கூடின. இவளோ தன்னை முற்றிலும் ரச பாவத்தில் தெய்வீகக் காதலில் லயிக்கச் செய்து மிக ப்ரம்மாண்டமான பஜனை செய்தார்.பக்தி அலைகள் அதிர்வுகளைக் கோயில் எங்கும் எழுப்பின.

இவளையே அடைய எண்ணிய அரசன் தன் வீரர்களை அனுப்பி அவளைத் தூக்கி வர உத்தரவு இட்டான்.அவர்கள் இவளைக் கண்டு அரண்மனைக்கு வரும்படி கூறிட, "வீரர்களே! ஏகாதசி பஜனை முடிந்து அடியேன் வெளியில் வருவேன், அப்போது நானே வருவேன், காத்திரும்!" என்று கூறிச் சென்று விட்டாள்.

ஏகாதசி மிகவும் கோலாகலமாக நிகழ்கிறது.நேரம் போகிறது.வேசியாகும் வினை அழைக்கிறது.ஆனால் வினைத் தீர்க்கும் பக்தி தடுக்கிறது.ராதையையும் சீதையையும் கோதையையும் மனதில் எண்ணி எண்ணி உள்ளுருகி பாத்ரா தேவி, "உண்மையில் என் உடலும் ஆவியும் மனிதனுக்கு இல்லை! ராதையும் சீதையும் கோதையும் உன்னுடன் கலந்தது உண்மையாயின் அடியேனையும் ஏற்றிடுக!" என்று அபங்கம் பாடிப்பாடி ஆடுகையில் பாத்ராவின் ஆவி பிரிந்து பண்டரீ தேவனின் கமலபாதங்களில் கலந்தது.

இதை உணர்ந்த அரசன் தன் தவற்றை உணர்ந்தான்.ஆனால் அவன் மனம் மாறி பாத்ராவையே தன் மானசீக குருவாய் ஏற்றுக் கொண்டு அவரது அபங்கத்தைப் பரப்பியும் பக்தியைப் பரப்பியும் வாழ ஆரம்பித்து நற்கதி தேட முயற்சித்தான்.அம்மையாரைப் பண்டரீ தேவன் தன் கோயிலின் தெற்கு ப்ரகாரத்தின் நடுவில் சமாதி படுத்தும் படி கூறினார்.அதன் படி இன்றும் அவரது

சமாதி உள்ளது.அதில் அழகிய பெரிய தாட்டி என்ற வகை மரமும் உள்ளது.அதன் கீழ் சாளக்ராம ரூபத்தில் திருமலை இறைவன் ஆவாஹனம் செய்யப்பட்டு இருக்கிறார்.

அம்மையாரின் பக்தியும் ஸ்திட புத்தியும் பக்தியும் ப்ரேம பக்தியும் அவரது தீவினையைத் தடுத்தது.இன்றும் பாண்டுரங்கன் முன் அவரது அபங்கங்கள் மிகவும் வீரியத் தன்மை கொண்டு பக்தர்களால் பாடப்படுவதைக் காணலாம்!

ஹரி ஓம்!